**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**CC. No: 304/2025** Date: 10.03.2026

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 1** |
| Name | : | ஸ்வர்ணா |
| Father's Name | : | க/பெ. சிலம்பரசன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 10.03.2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது மதிகொண்பாளையத்தில் குடியிருந்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது கணவர் ஆவார். சுமார் 2 வருடங்களுக்கு முன்னதாக இரவு 1.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது எனக்கும் என் கணவருக்கும் இடையே என் குழந்தை சம்பந்தமாக வாய்தகராறு ஏற்பட்டது அதனால் நான் கோபித்துக்கொண்டு ஒடசல்பட்டியிலுள்ள எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன். நான் அவ்வாறு கோபித்துக்கொண்டு வந்ததால் எனது பெற்றோர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்கள். புகார்வாக்குமூலத்தில் என்ன எழுதியுள்ளது என்பது எனக்கு தெரியாது. புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆகும்.** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

நான் போலிசார் விசாரணையில் கடந்த 07.04.2024 ம் தேதி அதிகாலை 1.00 மணியளவில் ராஜகோபால் தெருவிலுள்ள எனது வீட்டில் நான் இருந்தபோது ஆஜர் எதிரி என்னை தகாதவார்த்தையால் பேசி, கயிற்றால் முதுகு, வலது, இடது தோள்பட்டை, வலது, இடது தொடை ஆகிய இடங்களில் அடித்து காயப்படுத்தினார் என்றும், கயிற்றை காண்பித்து கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார் என்றும், இது சம்பந்தமாக

நான் புகார் வாக்குமூலம் அளித்தேன் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரி எனது கணவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

TAMIL ARASU A

Digitally signed by TAMIL ARASU A
Date: 2026.03.10 16:56:47 +0530